Tit-Bits of Animal Life

Vol 3. No. 3. July 1923.

JL
KZm 211, No1 TB
N23.23.3
197925

1063

Vol. XXIII] July, 1923 [No. 3

Society for the
Prevention of Cruelty
to Animals, Madras

17 AUG 1923

ENGLISH & TAMIL.

# TIT-BITS OF ANIMAL LIFE

ஜந்து வர்த்தமான ஸாரம்.

*Copies can be had on application to the Honorary Secretary, S.P.C.A., Vepery, Madras.*

Annual Subscription, Half a Rupee, payable in advance.



EDITED BY

Rai Saheb G. Venkataranga Rao, M.A.,

*Member of the S.P.C.A,*

சென்னை: ஜீ. ஹி. ஸி. சங்கத்தின் மெம்பராகிய

ராய் சாஹேப் ஜி. வேங்கடரங்க ராவ், எம்.ஏ. அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

PUBLISHED QUARTERLY.

## A QUARTERLY JOURNAL—Vol. XXIII.—Number 3.

July, 1923–ருடு ஜூலை

CONTENTS


| IN ENGLISH | PAGE |
|---|---|
| Animal Week ... ... ... ... | 21 |
| The Milk and Cattle Problem ... | 22 |


பொருளடக்கம்


| தமிழில் | பக்கம் |
|---|---|
| பசுமாடுகள், பால் இவைகளைப்பற்றிய முக்கிய விஷயம் ... ... ... | 24 |
| ஜீவகாருண்யத்தைப் போதிக்க நியமிக்கப்பட்ட வாரம் ... ... ... | 27 |
| எஸ். பி. சி. ஏ. ... ... ... | 28 |
| வியாசம் ... ... ... | 30 |


# TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

# ஜந்து வர்த்தமான ஸாரம்

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை

17 AUG 1923

சம்புடம் XXIII.] JULY, 1923–ருடு ஜூலை [இலக்கம் 3.

## Animal Week

The Madras Society for the Prevention of Cruelty to Animals, has been during the past forty-one years of its existence adopting different means for the prevention of cruel and improper treatment of animals and the amelioration of their condition generally throughout the Presidency of Madras.

At present there are many forms of cruelty which the Society is powerless to check or even to prevent by its punitive work but which can be effectively and successfully attacked by educational means.

The importance of teaching the young their duty towards the animal creation and thereby their duty also to their fellowmen, has been often ignored with the result that cruelty has been fostered out of sheer thoughtlessness. Therefore realizing the importance of prevention the Society is desirous of getting hold of the young in order to impress upon them the simple and delightful lesson about 'Kindness to Animals.' To this end it is proposed to inaugurate what may be called an *Animal Week* to be observed once every year, the object of which is to promote kindness to animals by educational means.

### SUGGESTIONS

It has been suggested that the observance of *Animal Week* should be uniform throughout the Presidency as by doing so there would be a feeling of unity in the thought that, the young everywhere are joining hands in the interests of kindness to animals. The middle of September from the 2nd Sunday to the following Saturday, has therefore been set apart for this purpose.

The idea is that the Superintendents and Headmasters of Schools should select a particular day in that week that would be most convenient to them and arrange a meeting of the children at which their attention will be directed towards the duty of being kind and considerate to animals. If a meeting is not possible to be arranged, the occasion of the students assembling together at the prayer time may be availed of or a period on that day may be allotted for the purpose of teaching the children lessons on kindness to animals.

Much of the success of these meetings will depend upon the enthusiasm of the organizers. The work of the S.P.C.A. may be explained and the interest of children enlisted in its behalf.

### BAND OF MERCY

If sufficient interest has been created there may be a splendid opportunity of reviving and strengthening the *Band of Mercy*, a movement for promoting kindness to animals among the school-going children. The Band will admit persons who shall give their assent to the following pledge :—

> 'I will try to be kind to all living creatures
>
> And will try to protect them from cruel usage.'

The members will receive an attractive card of membership and the names of the members will be enrolled on a form. The Band will be named after the School or District and meetings may be held from time to time in connection with the Band and the members encouraged to take part by giving readings and recitations. Stories and anecdotes may also be related. The

Band will also encourage its members to avoid unkindness to one another and to all persons.

In order that the interest aroused may be sustained it would be necessary to keep in touch with this Society, so that valuable assistance and suggestions may be given from time to time when required.

In conclusion, this Society earnestly appeals to all the Principals, Head Masters, Superintendents of all Schools, including Sunday Schools, in the interests of the sacred duty of the promotion of humane and just treatment of animals, to take up this opportunity to train up the young in the path of kindness and mercy.

During the past few years, humanitarians in the United States of America have set apart a week in the month of May when humane literature has been distributed and humane propaganda carried on, under the name of 'Be Kind to Animals Week.' The clergymen made special mention of humaneness to animals in the sermons, during the Sunday after this week, and hence the Sunday has been called 'Humane Sunday.'

A similar movement for a 'Mercy Sunday' was started in Calcutta in 1913 and since then several churches in Calcutta and Bengal have devoted a day for the purpose indicated and efforts are being made to make the movement general throughout India, Burma and Ceylon.

The Society is addressing also the Chaplains of this Presidency to set apart a Sunday in their churches to help the cause of humaneness to the lower creation in the hope that a few words from their pulpits on the subject of kindness to dumb animals would do much in support of the crusade against cruelty.

Pamphlets as to the lessons to be taught will be issued just previous to the period allotted for the observance of the animal week.

The Society hopes that the Heads of the Institutions will second the Society's efforts in this direction and thus make the movement a success.

## The Milk and Cattle Problem

The following appeal has been issued by the Marwari Association of Calcutta to District Boards, Municipalities, Rajas, Maharajas, Zemindars and Members of Legislatures throughout the country on the subject of the provision of pasture land for cattle and we heartily commend it to our readers :—

Sir,

In view of the grave economic situation which has been created by the gradual but steady decline and deterioration of the cattle stock of the country, I am desired by the Marwari Association to address this appeal to you on the urgency of providing pasture land for the grazing of our draught and dairy cattle.

The villages in the interior where the nation lives furnish unmistakable proof of the awful decline and deterioration that have taken place in the number and quality of our cows, bulls and bullocks. In most of the rural homes, cows, bulls or bullocks are now conspicuous by their absence, the few that can be seen in others are mostly famished animals with visible ribs which can hardly be expected to be either good milkers or good plough cattle, and milk and milk products are scarcely available and extremely dear in consequence. But it is a matter of common knowledge that only a few decades back, cows, bulls and bullocks formed part of the possessions of almost every house-holder, many people used to keep large herds and milk and milk products were to be had in plenty and at a cheap price.

As a result of this decline, the number of cattle per hundred of population now comes to 59, while it is 74 in Denmark, 79 in the United States of America, 80 in Canada, 120 in Cape Colony, 150 in New Zealand and 259 in Australia. The proportion is still higher in some other countries. If it is remembered in this connection that all the above countries are industrially far more advanced and economically far more prosperous than India and their people are not dependent mainly upon agriculture for their livelihood or upon milk and milk products for their nourishment like the people of India, it will be clear that the proportion of cattle per 100 of population is far too low in India.

In fact, the number of cattle now available in the country is inadequate for its needs. According to the official records, the area of arable land in British India is 228 million acres, but the number of plough cattle is

197925



only 49 millions. Leaving aside 25 per cent of this number as sick, old and infirm and 25 per cent. for other works, 24½ millions only are available for purposes of cultivation. It means that a pair of cattle which, as every one knows, cannot properly till more than 5 acres of land in a season, has to till 19 acres, in other words, has to do the work of 4 pairs. It also means that India has only one-fourth the number of cattle required for the cultivation of its arable land. No wonder that cultivation in the country has become extremely inefficient and the rate of outturn of even the staple crops, such as wheat and rice, extremly poor compared to that of other countries. While the outturn of wheat is only 11·5 bushels per acre in India, it is 32 in Japan, 33 in Denmark, 30 in Great Britain and 32·5 in Switzerland. As regards rice, while India produces 35 bushels to the acre, Spain turns out 101 bushels. No wonder that although India requires about 9 crores tons of food grains for the consumption of her people every year, she is unable to produce much more than half that quantity and crores of people have to drag on a miserable existence, living on one meal a day or on semi-liquid food like rice water from year's end to year's end and many have to starve.

More deplorable is the condition in regard to our stock of milch cattle. The country does not possess more than one-eighth the number required to supply the people with a fair quantity of milk. There are said to be 50 millions of milch cattle in the country but ill-fed and famished as they are, they have mostly lost their characteristics as good milkers. How greatly our milch cattle have deteriorated in quality will be evident from the fact that while only a quarter of a century back, the daily average yield of milk per head of cattle was 5 seers, it is 1 seer now. But where is the wonder? Can we expect milk from mere bags of bones? In England and Denmark the average yield of milk per day per head of cattle is 20 lbs. Could deterioration of Indian cattle go further? But this is not all. According to official publications, some of the finest breeds are in danger of total extinction. Where is the wonder that milk and milk products have become extremely scarce and dear, the rich man's luxury, beyond the reach of the middle and the poorer classes? While the price of food grains has risen 5 to 7 times during the last 60 years, that of milk has risen more than 40 times and even at such high price pure milk is not available.

The above figures reveal a terrible state of things from the point of view of the country's economic future and the health of the people and necessitate serious reflection.

Having regard to the fact that the cattle problem of the country is inseparably linked up with its health and bread problem, it is not a moment too soon now to find out the causes and to take necessary steps to remove them. One of the main causes which have contributed to bring about this serious decline and deterioration of India's cattle stock is the utter inadequacy of grazing grounds which, according to expert opinion, tells severely upon their health and is the most important circumstance adverse to cattle breeding. What generally happens is that the owners who are mostly poor and cannot afford the expenses of sufficiently feeding their cattle at home, are compelled to sell them at a young age as they become too weak and emaciated to be of any service. None but butchers care to buy such cattle and so, after serving their masters, ill-fed and ill-nourished, throughout the few years of their life, these most useful domestic animals ultimately but prematurely go to the butchers' knife. Statistics show that about 10 millions of cattle are slaughtered every year in India. Who knows how many millions more find relief in death otherwise?

From official publications it appears that gradual encroachment on grazing lands both by the State and the people has led to the present awful want of pasture land and, as in other respects so in this, the condition in India is now the worst of all countries in the world. The area of land available per head of cattle for grazing is only ·17 acre in Bengal and a little more in other parts of India, while it is 1·6 acres in the United States of America, 1·35 acres in New Zealand and 1·44 acres in Germany, though the price of land in those countries is far higher than in India. Cultivation of fodder crops is also very scanty, being only a little over 1 per cent of the cropped area while in America it is 3·5 per cent. The prevalence of infectious diseases like rinderpest which carries off a large number

of cattle every year is said to be due to no small extent to this cause.

The foregoing paragraphs show unmistakably that the miserable condition of the cattle stock of the country, their awful decline in number and deterioration in quality, is due chiefly to neglect on the part of the Government and the people. It is very much to be regretted that in a country where, in the olden days, the laying aside of a tenth part of every village for pasturage was the law, where the keeping and rearing of the cow was regarded as an act of merit and entitled the owners to titles of distinction, the people should forget themselves so far as to neglect the cow, the bull and the bullock. But the result of this neglect has been terrible. The inefficiency of cultivation, poor outturn of crops, scarcity and unparalleled rise in the price of milk and milk products which constitute the chief nourishment of the people, insufficient supply and dearness of food and the consequent deterioration of the physical stamina of the people which makes them subject to frequent attacks of all sorts of diseases, heavy mortality among women of the child-bearing age and among infants for want of nutrition and the gradual but steady advent of wasting diseases like tuberculosis are all attributable, in a large measure, to the depletion and deterioration of the cattle stock. To continue to neglect these animals is to invite irretrievable economic disaster to the country.

It is therefore high time that Government were approached for legislation on the subject authorising the District Boards and Municipalities to spend some portion of their income to acquire land for the free grazing of cattle till sufficient land has become available for the purpose in their jurisdiction, permitting free grazing in specified areas of Government forests and on the sides of public roads and providing for pasture land in Government Khas Mahals. My Association feel that while pressing the need of such a law on the attention of Government, if the Maharajas, Rajas, Nawabs and other big landlords, Members of Legislatures and the self-governing institutions of the country, such as the District Boards and Municipalities, will strive heart and soul and with a harmonious singleness of purpose to do what can be done independently of Government aid, it is yet possible to minimise the difficulties of the situation and to avert that otherwise inevitable disaster, at least to a large extent. All that is needed is to prevent encroachment upon pasture lands and where there is no land set apart as such, to see that all the available land is not brought under the plough every year, but that some portion is left uncultivated for two or three years at a stretch to be utilised for cattle grazing. When in due course that area is taken up for cultivation, an equal portion may be similarly left out elsewhere. While removing the want of pasture land, it will also increase the fertility of the land to the great benefit of the cultivators themselves. The fact cannot be ignored that by bringing every inch of available land under the plough every year and by depriving the household cattle of their grazing, more harm than good is done to the country.

It is therefore the earnest hope of my Association that in the best interests of the motherland you will do all that lies in your power to see that the existing inadequacy of pasturage is removed.

DEBI PRASAD KHAITAN,
*Honorary Secretary,*
*Marwari Association, Calcutta.*

## பசுமாடுகள், பால் இவைகளைப் பற்றிய முக்கிய விஷயம்.

நமது தேசத்தில் ஆடு மாடுகள் குறைவதும், அவைகள் பலஹீனமடைவதும், நமது தேசத்து செல்வ நிலைக்கே கெடுதி என்று யோசித்து, நமது தேசத்திலுள்ள ஆடு மாடுகளுக்கு ஒவ்வொரு ஊரிலும் மேய நிலம் சேகரிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி கல்கத்தாவிலுள்ள மார்வாரி சங்கத்தாரின் விருப்பப்படி இம்மனு யாவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

கிராமங்களில் பசுமாடுகள் எருதுகள் இவைகளின் தொகை குறைந்து வருவது யாவருக்கும் தெரியும். இக்கிராமங்களில் அநேக வீடுகளில் மாடுகளில்லவேயில்லை. மாடுகளிருக்கும் சில வீடுகளில், அவைகள் பலஹீனமாயும், பெருத்திராமல் எலும்பு உடலுடனுமிருக்கின்றன. அவைகள் அதிக



பாலைக் கொடுப்பதுமில்லை, எருதுகளுக்குப் பூமியை உழத்தகுந்த பலமும் கிடையாது. கிடைக்கும் பாலிலிருந்து அதிக தயிரும் நெய்யும் செய்ய முடிகிறதில்லை. ஆனது பற்றி அவைகளின் விலையோ அதிகமாயிருக்கிறது. சுமார் 20, 30 வருஷங்களுக்குமுன் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் பசுக்களிருக்கும், அநேக ஜனங்கள் அநேக மாடுகளை வைத்திருப்பார்கள். அவ்விதம் வைத்திருந்தமையால் பால், தயிர், வெண்ணெய், நெய் ஏராளமாய் கிடைக்கும். அவைகளின் விலையோ இப்பொழுதிருப்பது போலல்லாமல் மலிவாயிருந்தது.

இவ்வித ஈனஸ்திதியினால் ஜனத்தொகை 100 பேருள்ளவிடத்தில் 59 மாடுகளிருக்கின்றன. ஆனால் டென்மார்க்கில் 74-ம், அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்டில் 79-ம், கானடாவில் 80-ம், கேப்காலனியில் 120-ம், நியூஸீலண்டில் 150-ம், ஆஸ்ட்ரேலியாவில் 259 மிருக்கின்றன. இன்னும் சில தேசங்களில் தொகை அதிகமாயிருக்கின்றது.

மேற்கூறிய தேசங்கள் கைத்தொழில்களிலும், செல்வநிலைமையிலும் இந்தியாவைவிட விருத்தியடைந்திருக்கின்றன. இந்தியர்களைப் போல் அவர்கள் வியவசாயத்திலேயே ஜீவனம்செய்து பிழைக்கவுமில்லை. நம்மைப் போல் பாலையும், தயிர், நெய் முதலியவைகளையும் குடித்து போஷிக்கப்படவுமில்லை. நமது தேசத்திலுள்ள மாடுகளின் தொகை மிகவும் குறைந்திருக்கிறது. உண்மையாகவே நமது தேசத்திலுள்ள மாடுகள் நமக்குப் போதுமானவைகளல்ல.

ப்ரிடிஷ் இந்தியாவில் பயிர் செய்யக்கூடிய நிலம் 228 கோடி ஏக்ராக்களிருக்கின்றன. பூமியை உழக்கூடிய மாடுகளின் தொகை 49 கோடிதான். இதில் 100 க்கு 25 வியாதி என்று தள்ளிவிடுவோம். வேலைசெய்ய சக்தியில்லாதவைகள் 100 க்கு 25 ஆக வைத்துக்கொள்வோம். இவைகள் நீங்க மீதி 24½ கோடி மாடுகள்தான் வியவசாயத்திற்கு உதவுகின்றன. ஒரு ஜதை மாடுகள் 5 ஏக்ரா நிலத்தைக்கூட நன்றாக உழமுடியாது. ஆனால் ஒரு ஜதை மாடுகள் 19 ஏக்ரா நிலத்தை உழவேண்டியிருக்கிறது. அதாவது 4 ஜதை மாடுகள் செய்யும் வேலையை ஒரு ஜதை மாடு செய்யவேண்டியிருக்கிறது. இதனால் இந்தியாவில் வியவசாயம் செய்யக்கூடிய நிலத்துக்கு வேண்டிய நான்கில் ஒருபாகம் மாடுகள்தானிருக்கின்றன. இப்படியிருப்பதால் கோதுமை, நெல் முதலிய பயிர்களின் மாசூல் மற்ற தேசங்களைவிட மிகவும் குறைவாகவேயிருக்கின்றது. பூமியை உழுவதற்கும் போதுமான மாடுகள் போதாது. இப்படியிருப்பது ஆச்சரியமல்ல அல்லவா? திருஷ்டாந்தமாக இந்தியாவில் ஒரு ஏக்ராவின் கோதுமை மாசூல் 11·5 புஷலாகவிருந்தால் ஜப்பானில் 32, டென்மார்க்கில் 33, க்ரேட்ப்ரிடனில் 30, சுவிட்சர்லண்டில் 32·5, யாக இருக்கின்றன. நெற்பயிரோ இந்தியாவில் ஒரு ஏக்ராவுக்கு 35 புஷல் உண்டாகிறது. ஸ்பெயின் தேசத்தில் 101 புஷல் உண்டாகிறது. இந்தியாவிலுள்ள ஜனங்களுக்கு ஆகார விஷயமாக 9 கோடி டன் தானியங்கள் வேண்டியிருக்கின்றன. இப்பொழுது அதில் பாதிகூட பயிர் ஆவது கஷ்டமாயிருக்கிறது. அநேக ஜனங்கள் ஒரு தினத்தில் ஒருவேளை சாப்பிடுகிறார்கள். அநேக கோடி கணக்கான ஜனங்கள் கஞ்சியைக் குடித்து ஜீவிக்கிறார்கள். இவர்களில் அநேகர் பசியின் கொடுமையால் வருஷமுழுவதும் தவிக்கிறார்கள்.

பால் கொடுக்கும் பசுக்களின் தொகை குறைந்து வருவது மிகவும் விசனகரமாயிருக்கிறது. நமது தேசத்திலுள்ள ஜனங்களுக்கு 8-ல் ஒருபாகம் பால்கூட கிடைப்பது அருமையாயிருக்கிறது. நமது தேசத்தில் 50 கோடி பசுக்கள் பால் கொடுக்கும் ஸ்திதியிலிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவைகளுக்கும் போதுமான ஆகாரமில்லை. அவைகள் இளைத்திருக்கின்றன. இவ்விதம் அவைகளிருப்பதால் அவைகள் அதிக பாலைக்கொடுக்க முடியவில்லை. 25 வருஷங்களுக்கு முன் பசு ஒன்று 5 சேர் பால் கொடுத்தது. இப்பொழுது ஒரு பசு 1 சேர் பால் கொடுக்கிறது. சதையின்றி எலும்புள்ள மாடுகள் அதிகப் பாலைக் கொடுக்க முடியுமா? இங்க்லாந்திலும் டென்மார்க்கிலும் பசுமாடு ஒன்று 20 பவுண்டு நிறையுள்ள பாலைக்கொடுக்கிறது. நமது தேசத்திலுள்ள சிறந்த மாடுகளோ இறந்தும் விடுகின்றன. சிறந்த மாடுகள் இருந்தாலல்லவோ அவைகள் சிறந்த குட்டிகளைப் போ[illegible]தனால் சிறந்த மாடுகளின் தொ[illegible] இ[illegible]த ஸ்திதியில் ஏ[illegible]க்கும் மத்திய [illegible]க்கும்

197925

பால் கிடைக்காமலிருப்பதும், விலை அதிகரித்திருப்பதும் ஆச்சரியமல்ல. மேலும்தானியங்களின் விலையோ 60 வருஷத்திற்குள் 5 லிருந்து 7 மடங்கு வரையிலும் உயர்ந்திருக்கிறது. பாலின் விலையோ 40 மடங்குக்கு அதிகமாக உயர்ந்திருக்கிறது. இவ்வளவு மடங்கு உயர்ந்திருந்தும் சுத்தமான பால் கிடைப்பதேயில்லை.

மேலே நாம் குறிப்பிட்ட கணக்குகள் நமது தேசத்தில் செல்வநிலையின் பரிதாபஸ்திதியும், ஜனங்களின் தேகாரோக்ய ஸ்திதியும் அபாயமாயிருப்பதென்பதை தெரிவிக்கின்றதல்லவா ?

இதன் காரணங்களைக் கண்டு பிடிக்கவும் அவைகளுக்குப் பரிகாரங்களைத் தேடவும் இப்பொழுதுதான் தகுந்த சமயம். இனி காலதாமதம் செய்யக்கூடாது. அவைகளை நீக்கத்தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும். இந்தியாவில் மாடுகள் இவ்வித ஈனஸ்திதியிலிருப்பதற்கு முக்கியகாரணம் அவைகளுக்கு மேயப் போதுமான இடமில்லாததே. இதனால்தான் அவைகளுடைய தேகாரோக்கியம் கெடுகிறது. மாடுகளை வளர்ப்பவர்கள் சாதாரணமாக ஏழைகள். அவர்களுக்கு தங்கள் மாடுகளுக்குப் போதுமான ஆகாரம் கொடுக்க சக்தியில்லை. ஆகையால் அவர்களுடைய மாடுகள் பலஹீனமாயும், வேலைசெய்ய சக்தியில்லாமலுமிருக்கின்றன. அவைகள் முதிர்ந்த வயதையடைவதற்குள்ளாக அவைகளை விற்க வேண்டியிருக்கிறது. இவ்வளவுகாலம் வேலைசெய்துவந்த அம்மாடுகளை கசாப்புகடைக்காரன்தான் விலைக்கு வாங்குகிறான். மற்றவர்கள் வாங்க முன்வருவதில்லை. ஏனெனில் அவைகள் ஆகாரமின்றி இளைத்திருக்கின்றன. பாலும் கிடைப்பதில்லை. வேலைக்கும் பிரயோசனமில்லை. ஆனதுபற்றி அவைகள் கடைசியாக கசாப்பு கடைக்காரனுடைய கத்திக்கு இரையாகின்றன. இந்தியாவில் ஒவ்வொரு வருஷத்திலும் சுமார் 10 கோடி மாடுகள் கொல்லப்படுகின்றனவென்று தெரிகிறது. இன்னும் எத்தனையோ கோடி மாடுகள் வேறுவிதமாக இறந்து விடுகின்றனவென்பது யாருக்குத் தெரியும் ?

கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் மாடுகள் மேயுமிடத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் அபகரிப்பதினால்தான் மாடுகளுக்கு இவ்வித கஷ்டங்கள் உண்டாயிருக்கின்றன. இந்தியா மற்ற தேசங்களைவிட இவ்விஷயத்தில் அதிக ஈனஸ்திதியிலிருக்கிறது. பெங்காலில் ஒரு மாட்டுக்கு மேய விட்டிருக்கும் இடத்தின் சுற்றளவு ·17 ஏக்ரா. இந்தியாவின் மற்ற பாகங்களில் இத்தொகைக்கு இன்னும் சிறிது அதிகமாயிருக்கிறது. ஆனால் அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்டில் 1·6 ஏக்ராக்களும், நியூஸீலெண்டில் 1·35 ஏக்ராக்களும், ஜெர்மனியில் 1·44 ஏக்ராக்களுமிருக்கின்றன. அவ்விடங்களிலுள்ள நிலத்தின் விலையோ அதிகமாயிருந்த போதிலும் அதிகமாகவே நிலங்கள் விடப்பட்டிருக்கின்றன. மேலும் நமது இந்தியாவில் மாடுகளுக்கு ஆகாரமாக புல் முதலியவைகளைப் பயிராக்கும் நிலமோ மிகவும் சொற்பமாயிருக்கிறது. அதாவது சாகுபடி செய்யும் நிலங்களில் 100-க்கு 1 வீதம் தானிருக்கிறது. அமெரிக்காவில் 100-க்கு 35 வீதமிருக்கிறது. மேய நிலம் போதுமானதாக இங்கில்லாமையால் அவைகளுக்குத் தொத்து வியாதிகள் உண்டாகின்றன.

மேற்கூறியவைகளால் மாடுகளின் தொகை குறைவதும், பால் அதிகம்கொடுக்க முடியாமலிருப்பதும், வேலைசெய்ய சக்தியின்றியிருப்பதுமாகிய பரிதாபமான ஸ்திதிக்கு காரணம் கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் பராமுகமாயிருப்பதே என்பது விளங்குகின்ற தல்லவா ?

முன்காலத்தில் ஒவ்வொரு கிராமத்தில் 10-ல் 1 பாகம் மாடுகளுக்கு மேய இடம் விட்டு வந்தார்கள். மாடுகளை நன்றாகப் போஷித்தும் காப்பாற்றியும் வந்தார்கள். அவ்விதம் செய்தவர்கள் இப்பொழுது மாடுகளைக் கவனிக்காமலிருப்பது மிகவும் விசனகரமாயிருக்கிறது. இவ்வித கவனக்குறைவினால் பயங்கரமான ஸ்திதி உண்டாகிறது. வியவசாயத்தில் சமர்த்தின்மையும், மாசூல் சரியானபடி கிடைக்காமலிருப்பதும், ஜனங்களுக்கு முக்கிய ஆகாரமாயுள்ள பால், தயிர், நெய் முதலியவைகள் கிடைக்காமலிருப்பதும், அவைகளின் விலை அபாரமாய் உயர்ந்திருப்பதும், போதுமான ஆகாரவஸ்துக்கள் கிடைக்காமலிருப்பதும் அவைகளின் விலை கிராக்கியாயிருப்பதும் அவைகளால் ஜனங்கள் பலவீனமடைந்து பற்பல வியாதிகளுக்குள்ளாகிறார்கள். ஸ்திரீகள் அதிகமாய் பிரசவகாலத்தில் இறந்துபோவதும், சிறு குழந்தைகள் பலம் கொடுக்கத்தகுந்த ஆகாரமின்மையால் இறப்பதும், இன்னும் க்ஷயம் முதலிய பற்பல வியாதிகளால் ஜனங்கள் பலவீனமடைவதும் தேசத்தில் போதுமான ஆடு மாடுகளில்லாக் குறையே. இவ்விதம் நாம் இப்பிராணிகளைக் கவனிக்காமலிருந்து வந்தால் நமது தேசத்து செல்வநிலை சீர்கெடும்



ஆகையால் இச்சமயத்திலேயே காலதாமதமின்றி டிஸ்ட்ரிக்ட் போர்ட் முனிஸிபாலிடி முதலியவைகள் தங்கள் வரும்படியில் சிறிய தொகையை தங்கள் அதிகாரத்திற்குள்ளிருக்கும் இடத்தில் தக்க இடம் கிடைக்கும் வரையில் ஆடு மாடுகள் மேய நிலத்தை விலைக்கு வாங்கிவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டார் சட்டம் செய்து டிஸ்ட்ரிக்ட் போர்டு முனிஸிபாலிடிகளுக்கு உத்தரவளிக்கும்படி நாம் செய்யவேண்டும். மேலும் கவர்ன்மெண்ட் காடுகளிலும் பப்ளிக் ரஸ்தாக்களின் பக்கங்களிலும் மாடுகள் மேய பணம் யாதொன்றும் பெறாமல் விடவேண்டும்.

மகா ராஜாக்களும், ராஜாக்களும், நவாபுகளும், மிராசுதாரர்களும், நிலமுடையவர்களும், சட்டசபை மெம்பர்களும், ஸ்தலசுவய ஆட்சியில் சேர்ந்த டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பர்களும், தங்கள் தாங்களே கவர்ன்மெண்டை எதிர்பாராமல் சுயமாய் தடுக்கவொண்ணாத இந்த ஆபத்தை நீக்க முயல வேண்டும்.

இப்பொழுது தேவையானது என்னவெனில் மேய விட்டிருக்கும் நிலத்தை ஒருவரும் அபகரிக்கக்கூடாது. அவ்வித நிலம் விடப்படாத இடத்தில் சாகுபடி செய்யாத இடத்தை சாகுபடி செய்யாமல் மாடுகளுக்காக விடவேண்டும். பின்பு அவ்விதம் விடப்பட்ட நிலத்தைச் சாகுபடி செய்யலாம். முன் சாகுபடிசெய்த நிலத்தை அவ்விதமே இரண்டு மூன்று வருஷம் விட்டுவைக்க வேண்டும். மேய இடம் கொடுப்பதாலும் அந்நிலத்தை இரண்டு மூன்று வருஷம் சாகுபடி செய்யாமல் பின்னிட்டுசெய்தால் பூமி செழித்தோங்கி வியவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். மாடுகளுக்கு மேய காலி நிலத்தை விடாமலிருந்தால் தேசத்திற்கு நன்மையைவிட அதிக கெடுதி நேரிடும் என்பது நிச்சயம்.

ஆகையால் நமது ஜன்மபூமியின் க்ஷேமத்தின் பொருட்டு மேய நிலம் விடாத குறையை நீக்க ஒவ்வொருவரும் முயலுவார்களென்று நம்பப்படுகிறது.

## ஜீவகாருண்யத்தைப் போதிக்க நியமிக்கப்பட்ட வாரம்.

சென்னை ஜீவநிவாரண சங்கத்தார் சென்ற 41 வருஷகாலமாக பிராணிகளைக் குரூரமாயும் அநியாயமாயும் நடத்துவதையும் சென்னை ராஜதானி முழுவதும் அவைகளின் ஸ்திதியை உயர்த்தவும் பல வழிகளை யனுசரித்து உழைத்து வருகிறார்கள்.

இப்பொழுது பிராணிகளை ஹிம்சிக்கும் விதங்கள் பல. இந்தச் சங்கத்தார் பலவித குரூரகிருத்தியங்களைத் தடுக்க சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். தண்டனைக்குரிய உபாய வேலையினாலும் அவைகளைத் தடுக்க முடியவில்லை. ஆனால் வித்தியாவிஷய மார்க்கமாய் அவைகளைத் தடுக்கலாம்.

ஆகையால் வருஷத்துக் கொருமுறை ஒரு வாரத்தில் பிராணிகளிடத்தில் அன்பாயிருக்கவேண்டுமென்பதை அநுசரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கல்விக்குரிய மார்க்கங்களின் மூலமாய்ப் பிராணிகளிடத்தில் அன்பாயிருக்கவேண்டுமென்பதை விருத்தி செய்வதே இதன் நோக்கம்.

அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்டில் காருண்ணிய கனவான்கள் சென்ற சில வருஷங்களாக மே மாசத்தில் ஒரு வாரமுழுவதும் ஜீவகாருண்யத்தைப்பற்றி உபந்நியாசங்கள் செய்து வருகிறார்கள். அநேக துண்டு பத்திரிகைகளைப் படிக்கக் கொடுத்து வருகிறார்கள். மதபோதகர் இந்த வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைதினம் கோயிலில் பிராணிகளிடத்தில் காருண்ணியத்துடன் இருக்க வேண்டுமென்று ஜனங்களுக்கு உபந்நியாசம் செய்வது வழக்கம். ஆனதுபற்றி "காருண்ணிய ஞாயிற்றுக்கிழமை" யென்று அத்தினம் சொல்லப்படுகிறது.

மேற்கூறியவாறு ஒரு இயக்கம் கல்கத்தாவில் 1913-ம் வருஷத்தில் உண்டாயிற்று. அதற்கு "இரக்கத்தைக் காண்பிக்கும் ஞாயிற்றுக்கிழமை" யென்று பெயர். அக்காலமுதல் கல்கத்தாவிலும், வங்காளத்திலும் இதே நோக்கத்துடன் எல்லா கிறிஸ்துவ குருமார்கள் அத்தினத்தைக் கொண்டாடி

வருகிறார்கள். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களில் இவ்விதம் செய்ய முயன்றும் வருகிறார்கள்.

சென்னையிலுள்ள ஜீவகாருண்ய சங்கத்தார் அடுத்த செப்டம்பர் மாசத்தில் பிராணிகளிடத்தில் அன்பாயிருக்கவேண்டு மென்பதைப்பற்றி பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒரு வாரம் போதித்து வரும்படி இந்த இராஜதானியிலுள்ள எல்லா ஸ்கூல் தலைவர்களைக் கேட்டு வருகிறார்கள். இவ்விதம் செய்வதில் சிறுவர்களுக்கு பிராணிகளிடத்தில் தங்கள் கடமை இன்னதென்பதைப் போதித்து அதன் முக்கியத்தையும் உண்மைப்படுத்தலாம்.

அச்சமயத்தில் நமது ராஜதானி முழுவதும் அவ்விஷயத்தை ஒரே மாதிரியாக யாவரும் அநுசரிக்கவேண்டும். அவ்விதம் செய்தால்தான் ஒவ்வொரு விடத்திலும் பிராணிகளிடத்தில் அன்பாயிருக்க வேண்டுமென்ற பாத்தியதையில் சேரும் பிள்ளைகளுடைய மனதிலும் ஒரே ரீதியாய் நல்ல உணர்ச்சி ஏற்படும்.

எல்லா குருமார்களும் மற்றும் எல்லா மதஸ்தாபனத்தைச் சேர்ந்த தலைவர்களும் தங்கள் கோயில்களில் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று கூடும் ஜனங்களுக்கு வாயில்லா ஜீவ பிராணிகளிடத்திலும் காருண்ணியம் என்ற திவ்விய கடமையைப்பற்றி பிரசங்கம் செய்யும்படி இந்த சங்கத்தார் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறார்கள். அவர்கள் அவ்விதம் செய்தால் இக்கொடுமைக்கு விரோதமாக நடக்கும் போருக்கு ஆதரவாயிருக்கும்.

வெகு புராதனமான நாகரிகமுள்ள இந்திய ராஜ்ய முழுவதிலும் மதபோதனை, நீதி நடவடிக்கைக்குரிய போதனை முதலியவைகளில் அறிவுடைய முன்வருபவர்களுக்கு மதபோதகர்கள் செய்யும் மற்ற கடமைகளுடன் இவைகளையும் போதிக்க மறந்துவிட மாட்டார்களென்று நம்பப்படுகிறது.

குருமார்களும், மற்ற மதஸ்தாபனத்தைச் சேர்ந்த தலைவர்களும் இவ்விஷயத்தில் முயன்று இந்த இயக்கம் ஜயம் பெறுமாறு செய்வார்களென்று இச்சங்கத்தார் நம்புகிறார்கள்.

## S. P. C. A. எஸ். பி. சி. ஏ.

(முன் நம்பரின் தொடர்ச்சி.)

சுகவீனமாயிருக்கிற அல்லது புண்களினால் வருந்துகிற மிருகங்களை வேலைசெய்ய வைக்காதபடி மேல்பார்க்கிறதற்கு இச்சங்கம் இன்ஸ்பெக்டர்களை ஏற்படுத்தி யிருக்கிறது. யாராவது குரூரமாய் மிருகங்களை நடத்துவதாக அறிந்தவர்கள் ஒரு இன்ஸ்பெக்டருக்கு மாத்திரம் தெரிவித்துவிட வேண்டியது. அவர் அந்த மிருகத்திற்கு சிகிச்சை செய்யவேண்டியதையும், அவசியமானால் சொந்தக்காரன் தண்டிக்கப்பட வேண்டியதையும் குறித்துக் கவனித்துக் கொள்ளுவார். மிருகங்களை அன்பாய் நடத்தி அவைகளை நல்ல நிலைமையில் வைத்துக் கொள்ளுகிறவர்கள் இன்ஸ்பெக்டர்களுக்குப் பயப்படவேண்டியது அவசியமில்லை.

மிருகங்கள் பேசச் சக்தியற்றிருப்பதினால் உணர்ச்சியுமற்றிருக்கின்றன வென்று நாம் எண்ணக்கூடாது. மனிதரைப் போலவே அவைகளுக்கும் நரம்புகளிருக்கின்றன. மனிதனானாலும் சரி, மிருகமானாலும் சரி, நரம்புள்ள எந்த ஜெந்துவும் கஷ்டப்படுத்தப்படும்போது நோவின்னதென்பதை உணரக்கூடும்.

தேவன் சிருஷ்டித்திருக்கிற ஆச்சரியமான பிராணிகளைக் குறித்து நம்மாலியன்றதை அறிந்துகொள்வது நமது கடமை. நாம் எவ்வளவுக் கதிகமாய் அவைகளைக் குறித்துக் கற்றறிகிறோமோ அவ்வளவுக் கதிகமாய் அவைகளுடைய புத்திக் கூர்மையை நாம் வியந்து கொள்வதுமின்றி அவைகளிடத்தில் பட்சமாயுமிருப்போம். அவைகள் தங்களுடைய குட்டிகள் அல்லது குஞ்சுகளுக்காகச் சம்பாதிப்பதில் எவ்வளவு புத்தியுள்ளவைகளாயிருக்கின்றன! இந்த விஷயத்தின் சம்பந்தமாய் யாதொரு கவலையுமற்றிருப்பவர்கள் பட்சமின்றி பிராணிகளை நடத்த ஏதுவுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால் பட்சிகளும் மிருகங்களும் எவ்வளவு புத்திக் கூர்மையுள்ளவைகளாயும் நம்முடைய கவனத்தைக் கவர்ந்துகொள்ளக்கூடியவைகளாயுமிருக்கின்றன வென்பதை அவர்கள் அறியார்கள்.

இந்தப் பெரிய சங்கத்தின் சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட 'இரக்க கூட்டத்தார்'



என்று அழைக்கப்படும் சிறு சங்கங்கள் அநேக இடங்களில் இருக்கின்றன. ஒவ்வொரு சிறு பிள்ளையும் இவ் விசேஷித்த காரியத்தைப்பற்றி அறிந்துகொள்ளத் தக்கதாக இம்மாதிரிக் கூட்டம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இருந்தால் நன்மையாயிருக்கும்.

எஸ். பி. சி. ஏ. சங்கம் செய்யும் ஊழியத்தைப்பற்றி வாசித்து நன்றாயறிந்தாலொழிய இந்நல்ல நோக்கத்தை நிறைவேற்றும்படி எவ்வளவு பணத்தையும் நேரத்தையும் அநேகர் செலவிடுகிறார்களென்பதைச் சரியானபடி நம்மால் கிரகித்துக்கொள்ள முடியாது. இவ்வுலகம் தனித்தனி ஆட்களால் நிறைந்து ஒன்றாய்ப் பொருந்தினதாயிருக்கிறது. ஆகையால் தனித்தனியாக மாத்திரமல்ல, பொதுவாகவும் குரூரச் செய்கையை நிறுத்தி ஒவ்வொரு ஜீவ பிராணியையும் அன்போடு நடத்தப் பழகினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

ஜீவ பிராணிகளைப் பாதுகாக்கும்படி சட்டம் ஏற்படுத்தப்பட்டிருப்பதை அறியாமல் சில வேளைகளில் மனிதர் மிருகங்களைக் குரூரமாய் நடத்திக்கொண்டே யிருக்கிறார்கள். இவ்வகைக் குரூரச் செய்கையை அடியோடே நிறுத்துவதற்கு உதவிசெய்ய நமது தேசத்துச் சட்டம் ஆயத்தமாக விருக்கிறதென்று இதன் மூலமா யெல்லாரும் அறிந்து கொள்வார்களென்று நம்புகிறோம். அன்பற்ற விதமாய் நடந்துகொண்டதற்காக ஒரு மனிதனைத் தண்டிப்பது மாத்திரம் போதாது. பட்சமாயிருக்க அவனுக்குக் கற்றுக் கொடுக்கவும் வேண்டும். அது எவ்வளவு பயங்கரமான செய்கை யென்பதை நன்றாயறிந்தால் அநேகமாய் ஒருவரும் குரூரமாயிருக்க மாட்டார்கள்.

குரூர நடத்தைக்கு ஏதுகரமான குணங்களை முற்றிலும் நீக்கும் ஒரே வழி, இரக்கம், பட்சம், உதவியற்ற பிராணிகள்மேல் அன்பு, அனுதாபம் முதலிய குணங்களை இருதயத்தில் ஊன்றச்செய்வதே. ஒவ்வொரு மார்க்கத்தாரும் தங்கள் குருக்களிடம் வருஷத்தில் அநேகந் தடவைகளில் இந்த விஷயத்தைக் குறித்துப் பிரசங்கித்து, தேவன் மனிதருக்கு எவ்வளவோ அன்பையும் பட்சத்தையும் காண்பித்திருக்கிறபடியால் அவர்களும் அவருடைய சிருஷ்டிகளிடத்தில் அன்பாயிருக்க வேண்டுமென்று சொல்லும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்.

இந்த சங்கத்தார் யுத்தகாலத்தில் குதிரைகளுக்கு அதிக நன்மைசெய்து, ஆஸ்பத்திரிகள் கட்டுவதிலும், காயப்பட்ட குதிரைகளை அங்கு கொண்டுபோய்ச் சேர்க்கும்படி வண்டிகளுக்கு ஒழுங்கு செய்வதிலும் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்தனர். நல்ல ஊழியம்செய்த மிருகத்திற்கு நாம் செய்யக்கூடிய பிரதி பலன் அதை அன்பாய் நடத்துவதே என்பதை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நமக்காக அதிக காலமாக உண்மையாய் உழைத்த ஒரு மிருகம் வயதுசென்ற பருவமாகும்போது அல்லது சுகவீனமாகும்போது அதற்கு என்ன நேரிடுமோ என்பதைப்பற்றி யாதொரு எண்ணமும் கவலையுமற்று அதைத் துரத்திவிடக் கூடாது. அப்பேர்ப்பட்ட நன்றிகேடு கடவுளுக்கு அதிகக் கோபத்தை மூட்டும்.

அநேக யுத்தவீரர் தங்கள் குதிரைகளை அதிகமாய் நேசிக்கிறபடியால், தாங்கள் காயப்பட்டு ஸ்வாதீனையற்றுக் கிடந்து சற்று சுகமானவுடன் முதலாவது கேட்கும் கேள்வி, "எங்கள் குதிரைகள் எப்படியிருக்கின்றன?" என்பதே. ஒரு தடவை ஒரு குதிரை தன் எஜமானை வாயில் கௌவிக்கொண்டு போய் மோசத்திலிருந்து தப்புவித்ததாம். நாமெல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்து இச்சங்கத்திற்கு உதவிபுரிய வேண்டாமா? எவ்வளவு எளியவர்களாயிருந்தாலும் ஒவ்வொருவரும் உதவிசெய்யக்கூடும். மிருகங்களுக்கு ஒரு பட்சமான வார்த்தை சொல்லலாம். குரூரத் தன்மையைவிட பட்சமே அதிக வலிமையுள்ளதென்பதை எல்லாரும் நன்றாயறிந்து கொள்ளும்படி ரூபித்துக் காண்பிக்கலாம்.

எஸ். பி. சி. ஏ. சங்க விஷயமாய் மாதந்தோறும் பிரசுரிக்கப்படும் தாள் பிரதி ஒன்றில் சட்டவாக்கியமாக, "சிநேகிதரற்ற மிருகத்தின் சிநேகிதன்" என்று போட்டிருக்கிறது. நாமெல்லாரும் அப்படியானால் சிநேகிதரற்ற மிருகங்களுக்குச் சிநேகிதராக இருந்து, நம்மாலியன்ற மட்டும் அவைகளுக்கு இரக்கத்தையும் பட்சத்தையும் காண்பிப்போமாக.

மிருகங்களைக் குரூரமாய் நடத்துவதைத் தடுக்கும்படி ஏற்படுத்தப்பட்ட சங்கத்தில் நீங்களெல்லாரும் சேரப் பிரயாசப்படுங்கள்.

அப்படிச் செய்யக்கூடாமற் போனாலும் ஏதாவது ஒரு இரக்கக்கூட்டத்தைச் சேர்ந்து, எந்த ஜீவ ஜந்துவுக்கும், மனிதனானாலும், ஸ்திரீயானாலும், குழந்தையானாலும் சரி, மிருகமானாலும் பட்சியானாலும் சரி, நியாயமாய் நடத்தவேண்டிய பிரகாரம் இரக்கத்தோடும் பட்சத்தோடும் நடத்த மற்றவர்களை ஏவும்படி 'ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த விசேஷித்த விஷயத்திற்கு, உங்களாலியன்ற உதவி புரிவீர்களாக.

## வியாசம்.

"எல்லா ஜீவபிராணிகளும் தங்கள் குஞ்சுகள் அல்லது குட்டிகளை அருமையாக நேசித்து வருகிறது."

சாதாரணமாய் மனிதர்கள் பக்ஷி ஜாதிகளையும் விலங்கினங்களையும், மற்றும் பிராணிகளையும் இம்சித்து அதினால் தங்களுக்குப் பெருமையும், சந்தோஷமும் உண்டாக்குகிறார்களென்றறிந்து அவ்வகையான, துர்ப்பழக்கங்களை நிறுத்தும்படி காருண்ய சீமாட்டியாகிய காலஞ்சென்ற நமது விக்டோரியா சக்கரவர்த்தினியவர்கள், ஒரு சங்கம் ஏற்படுத்தி அதற்கு எஸ்.பி.சி.ஏ. என்று நாமம் சூட்டினர். அந்த சங்கத்தினர் இவ்வகைத் துர்ப்பழக்கங்களை நிறுத்தும்படி அநேக ஏற்பாடுகள் செய்து முயன்று வருகிறார்கள். இந்த சங்க விஷயமாய் அநேக உத்தியோகஸ்தர்கள் ஏற்பட்டு வாயில்லா ஜீவன்களுக்கு ஏற்படும் அநேக நிஷ்டூரங்களை ஒருவாறு தணித்து அக்கிரமமாய் சட்டங்களைமீறி வருகிறவர்களைத் தண்டித்தும் வருகிறார்கள். மேலும் மிருகஜீவன்கள் வயதாகி வேலைக்கு உதவாமல் எஜமான்களாலே தள்ளிவிடப்படுகிற சமயத்தில், அவைகளைச் சேர்த்து ஆதரித்து, அவைகளுக்கு வேண்டிய ஆகாரம் கொடுத்து வருகிறார்கள். இது யாவராலும் வியந்துகொள்ளப்படத்தக்க செய்கையே.

ஒருநாள் நான் மேல் வீட்டில் உலாவிக்கொண்டிருக்குங்கால், தற்செயலாய் ஒரு பலகணி வழியாய் எட்டிப்பார்த்தபோது சில சிறு பையன்கள் காகங்களைப் பிடித்து ஊசியினால் அதின் கண்களைக் குத்திக் குருடாக்கிவிட்டுப் பின் அதைப் பறக்கவிட்டு, அதுபோய் சுவரிலும், மரத்திலும் போய்மோதி விழுகையில், எல்லாப் பையன்களும் சேர்ந்து, கைகொட்டி சிரித்தார்கள். சில சமயங்களில் காலை ஒடித்துவிட்டு பறக்கவிடுகிறது. அது முடியாமல் கீழே விழும் பக்ஷத்தில், மறுபடியும் அதைத் தூக்கி இங்கும் அங்கும்போட்டு கடைசியில் கொன்றுவிடுகிறார்கள். பாவம், வாயில்லாப் பிராணியை இப்படிச்செய்தல் தகாது. இவ்விதமாக அவர்களுடைய கண்களையும் குருடாக்கி, அவர்களைச் சுவரிலும் கல்லிலும் மோத விட்டால் தங்களுக்கு எவ்விதமான வேதனையுண்டாகுமோ அதே பிரகாரமாக அந்த ஏழைப் பிராணிகளுக்கும் இருக்குமென்பதை யுணராமல் இப்படிச் செய்வது மனதிற்கு மிகச் சஞ்சலத்தை யுண்டாக்குகிறது. மற்றொரு நாள் ஒரு சிறுபிள்ளை இரு சிறு கோழிக்குஞ்சுகளை இருகையிலும் கழுத்தைப் பிடித்துக்கொண்டு, அதை ஒன்றோடொன்று தலையினால் உரசி, மோதி, அடித்து கடைசியில் அந்த அழகிய சிறு குஞ்சுகளைக் கொன்றுபோட்டுவிட்டான்.

அடிக்கடி சிறுவர்கள் சிறு நாய் அல்லது பூனைக்குட்டிகளை கயிறுகளினால் கட்டி இழுத்துக்கொண்டு போகிறதை நாம் பார்த்திருக்கிறோம். அவர்கள் அதை அடித்து கற்களை மேலே போட்டு இன்னும் பலவிதமான சித்திரவதைசெய்து கடைசியில் அதைக் கொன்றுவிடுகிறார்கள். ஒரு நாள் நானும் என் உபாத்தினியும் பாடசாலைவிட்டு வரும்போது ஒரு பையன் ஒரு நாய்க்குட்டியை பிரம்பினால் அடிக்கிறதைக் கண்டு, 'எங்கள் உபாத்தினி அவனிடம் விரைந்து சென்று, ஏனடா! இந்த நாயை கொடூரப்படுத்துகிறாய் என்று கேட்டதற்கு அவன் உன்னை யார் கேட்கச் சொன்னது என்று பதிலளிக்க, அவர்கள் கோபமுண்டவர்களாய் அவன் வைத்திருந்த பிரம்பைப் பறித்து அதினாலே அவனை அடித்து இப்போது எப்படியிருக்கிறது என்று வினவ அவன் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. பின் அவனை அனுப்பிவிட்டு, அந்த நாயையும் அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்தார்கள். இவ்வகையான இரக்க சிந்தையில்லாமல் உயிர்ப்பிராணிகளை இம்சிக்கிற இளைஞர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது இரக்கமில்லாத மனுஷ கொலைபாதகர்களாவார்கள் என்பதற்கு ஐயமுண்டோ?

(இன்னும் வரும்.)

PRINTED BY GEORGE KENNETH AT THE DIOCESAN PRESS, POST BOX 455, MADRAS.—B.2049.

197925

All animals are living hieroglyphs,
The dashing dog, and stealthy-stepping cat,
Hawk, bull, and all that breathe mean something more
To the true eye than their shapes show; for all
Were made in love, and made to be beloved.
Thus must he think as to earth's lower life,
Who seeks to win the world to thought and love.

PHILIP J. BAILEY.

# Convictions for the first half of 1923

This return is published to inform the public of the nature and extent of acts of cruelty to animals discovered by the Society in the City of Madras.

The following **CONVICTIONS** for cruelty to animals were obtained in Madras during the first half of 1923 by the Society's agency:—

| | | | |
|---|---|---|---|
| 1. | Working Horses in an unfit state | ... | 31 |
| 2. | Do. Ponies do. | ... | 199 |
| 3. | Do. Bullocks do. | ... | 896 |
| 4. | Do. Buffaloes do | ... | 3 |
| 5. | Do. Mules do | ... | ... |
| 6. | Cows ill-treated | ... | ... |
| 7. | Calves do. | ... | 28 |
| 8. | Fowls do. | ... | ... |
| 9. | Donkeys do | ... | 1 |
| 10. | Goading Bulls | ... | ... |
| 11. | Overloading | ... | ... |
| 12. | Owners causing cruelty | ... | 12 |
| | | Total ... | 1,170 |

## 1923-ஞூ த்தில் முதல் ஆறு மாதங்களில் ஜீவ ஹிம்ஸைக்காகச் செய்த தண்டனைகளின் பட்டி.

அடியில் குறித்த ஜீவ ஹிம்ஸையான குற்றங்கள் 1923–ஞூத்தில் முதல் ஆறு மாதங்களில் இந்தச் சங்கத்தாரால் கண்டறியப்பட்டுத் தண்டிக்கப்பட்டன:—

| | | | |
|---|---|---|---|
| 1. | உழைக்கச் சக்தியில்லாமல் நோயாளியாயிருந்த குதிரைகளை வருத்தி வேலை வாங்கினதற்காகத் தண்டித்த குற்றம் | .... | 31 |
| 2. | ,, குதிரைமட்டங்களை ,, | .... | 199 |
| 3. | ,, எருதுகளை ,, | .... | 896 |
| 4. | ,, எருமைக் கிடாக்களை ,, | .... | 3 |
| 5. | ,, கோவேறு கழுதையை ,, | .... | .... |
| 6. | பசுக்களைத் துன்பப்படுத்திய குற்றம் | .... | .... |
| 7. | கன்றுக் குட்டிகளைத் துன்பப்படுத்திய குற்றம் | .... | 28 |
| 8. | கோழிகளை ,, | .... | .... |
| 9. | கழுதைகளை ,, | .... | 1 |
| 10. | எருதுகளை தாற்றுக்கோலால் தூண்டினது | .... | .... |
| 11. | அதிக பாரத்தை ஏற்றியது | .... | .... |
| 12. | சொந்தக்காரர்களே செய்த மேற்குறித்த குற்றங்கள் | .... | 12 |
| | | மொத்தம் .... | 1,170 |

**இந்தச் சங்கத்தின் காரியங்கள் அவரவர்கள் இஷ்டப்பட்டுக் கொடுக்கும் உபகாரப் பொருளாலேயே நடத்தப்படுகின்றன.**

**The Society is supported only by Voluntary Contributions.**